திரு. டி. தங்கப்பன் : தலைவர் அவர்களே, தீவுப் பகுதிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கு ஜலண்டு அலவன்ஸ் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அது பற்றிய விவரம் இல்லை. தனிக்கேள்வி போடவும்.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, கைத்தொழில் ஆசிரியர்களை (Craft Teachers) வேலையிலிருந்து நீக்கப் போவதாகப் பரவலாகப் பேசப்படுகிறது. அது அரசாங்கத்தின் எண்ணத்தில் இருக்கிறதா ? அப்படி அவர்கள் நீக்கப்பட்டால், அவர்களுக்கு மாற்று வேலை கொடுக்க அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நீக்கவேண்டுமென்று அத்தகைய முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை. அத் தொழிலை எப்படிப் பயன்படுத்தலாம், ஆசிரியர்களை எப்படிப் பயன் படுத்தலாம், கொடுக்கிற கல்வியை மாணவர்கள் பின்னால் பயன்படுத்திக் கொள்ளும் முறையில் செய்யலாமா என்ற கருத்துதான் தெரிவிக்கப் பட்டிருக்கிறதே தவிர, முடிவு எடுக்கப்படவில்லை.

THIRU K. VINAYAKAM : Sir, whereas teaching has been considered the noblest of all professions but the sorrowest of all trades, will the Hon. Minister think of the possibility of bringing in fresh taxation proposals to the tune of Rs. 2 crores, in case the Central Government do not come to our aid, as the people are willing to pay towards the salary of the teachers by way of educational cess or educational tax?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் கூறும் கருத்து, நான் அமைக்கப்போகும் கல்வி ஆலோசனை குழுவில் வைத்து, எல்லோரும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டு, நிறைவேற்ற வேண்டும் என்றால், பல வகைகளில், பல வசதிகளை கொடுக்க செயல்படலாம். அந்த அந்த கல்வி நிலையங்களைப் பொருத்து, துறையைப் பொருத்து, ஆசிரியர்கள் நிலையைப் பொருத்து, வளர்ச்சி பெறும் வாழ்க்கையைப் பொருத்து, சகல கட்சி தலைவர்கள் குழு முடிவு எடுத்தால், அது உறுதுணையான பலனைக் கொடுக்கும் என்று கருதுகிறேன்.

*303 வினா.—**திரு. கரு. சீமைச்சாமி :**
திரு. கே. விநாயகம் : } மதிப்பிற்குரிய கல்வி.

தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கல்லூரி ஆசிரியர்களுக்குப் பல்கலைக் கழக மானியக் குழுவின் சிபாரிசுகளின் அடிப்படையில் சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 1–4–1966 முதல் கல்லூரி ஆசிரியர்களுக்கு பல்கலைக்கழக மானியக் குழுவின் சிபாரிசுகளின் அடிப் படையில் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று உத்திரவிடப்பட்டுள்ளது.

பயணிகள் கார்களுக்கு வரி

***304. வினா.—திரு. என். சங்கரய்யா :** மதிப்பிற்குரிய பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:

(அ) சென்னை மோட்டார் வாகனச் சட்ட விதிகளின்படி பயணி களின் காரியங்களுக்காக (for Tourist purposes) என்ற வகையில் சில கார்களுக்கு வரிக் கட்டணம் குறைக்கப்பட்டிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், பயணிகளின் காரியங்களுக்காக என்று பயன் படுத்தப்படும் கார்கள் அனைத்திற்கும் இந்த வரிக் கட்டணக் குறைப்புச் சலுகை நீட்டிக்கப்படுமா ?